(அ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு கால்நடை மருந்தகம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், அங்கே தினந்தோறும் சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை அறுபதாக இருக்கவேண்டும். ஆனால், உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரத்திலே உள்ள கால்நடை மருந்தகத்திற்கு ஒரு நாளைக்கு 28—லிருந்து 30 கால்நடைகள் வரைதான் சிகிச்சைக்காக வந்துகொண்டிருக்கின்றன. எனவே, அந்த மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 420, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

420—

பாலம் கட்டுதல்

***23965—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஆவாலூர், செலம்பை மற்றும் தேக்கனாம்பட்டி ஆகிய மலைக் கிராமங்களின் குறுக்கே செல்லும் ஆறுகளின் நடுவே பாலங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 7]

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி ஆவாலூர், செலம்பை கிராமங்களை இணைக்கும் சாலை 2 கிலோமீட்டர் உள்ள சாலையாகும். இச்சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தில் ரூ.60.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஓரடுக்கு ஜல்லி பரப்பும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், இச்சாலையில் கி.மீ. 0.2–ல் 6 மீ. கண் உள்ள ஒரு பாலப் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலத்தின் மேல்தளப் பணிக்காக கம்பி கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. மேலும், இச்சாலையில் கி.மீ. 1/2–ல் 60 மீட்டர் நீளத்திற்கு ரூ.22.53 இலட்சத்தில் குழாய் பதிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. கோட்டைப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த தேக்கனாம்பட்டி கிராமத்தில் 120 நபர்கள் வசிக்கிறார்கள். 800 மீட்டர் நீளமுள்ள இச்சாலை 2012–2013–ல் ஊரகக் கட்டமைப்புத் திட்டத்தில் ரூ.7.8 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, ஓரடுக்கு ஜல்லி பரப்பும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் கி.மீ.0.6–ல் 18 மீட்டர் நீளத்திற்கு ஓர் ஓடை குறுக்கிடுகிறது. இதற்கு பாலம் அமைத்திட சுமார் ரூ.125 இலட்சத்திற்குமேல் நிதி தேவைப்படுவதால் வரும் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதி, கோட்டைப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட செலம்பை, ஆவாலூர் செலம்பை காட்டாற்றின் குறுக்கே ஒரு சிறிய பாலம் கட்டவேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். ஏறக்குறைய 50 ஆண்டு காலமாக, அங்கேயுள்ள மலைவாழ் மக்கள்*

கோரிக்கை வைத்து வருகிறார்கள். அந்த ஆற்றைக் கடந்தபோது பள்ளிக்குச் செல்கின்ற இரண்டு மாணவர்கள் இறந்துவிட்டனர், அதனால் பாலம் கட்டவேண்டுமென்று கடந்த ஆட்சியிலே நான் கோரிக்கை வைத்தேன். ஆனால், பாலம் கட்டுவதற்கு பதிலாக இறந்த குழந்தைகளுக்கு நிதியை மட்டும் வழங்கினார்கள். ஆனால், இந்த ஆட்சியில் 6 மாதத்திற்குள் நான் வைத்த கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், துறையின் அமைச்சர் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்று, உடனடியாகப் பாலம் கட்டுவதற்கான பணியைத் தொடங்கி, ஏறக்குறைய முக்கால் பாகம் பணிகள் அங்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஏறக்குறைய 120 குடும்பங்கள் வாழக்கூடியது தேக்கனாம்பட்டி என்ற கிராமம். மழைக்காலங்களில் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுவிடுகிறது. அங்கு ஓர் அரசு ஆரம்பப் பள்ளி இருக்கிறது. ஆசிரியரே அந்தப் பள்ளிக்குச் செல்ல முடியாத அளவிற்கு அங்கு இருக்கும் ஒரு காட்டாற்றில் இடுப்புக்கும் மேலாக நீர்வரத்து வருகிறது. அங்கு எந்த நேரத்தில் நீர் வரும், போகும் என்று சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அந்தப் பணிக்கான செலவுத்தொகை 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் என்று இருந்தாலும், ஒரு கிராமமே துண்டிக்கப்படுகின்ற நிலை இருப்பதால், பழங்குடியினர் நலத் திட்டத்திலாவது அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, இவ்வாண்டு அந்தப் பணியைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிட மக்கள்மீது அதிக அக்கறை கொண்டு, எங்கெல்லாம் பாலப் பணிகள் மற்றும் சாலைகள் கோருகின்றார்களோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றி வைக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மாவின் அரசு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வரும் ஆண்டில்

2013 மே 7]

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, அந்த பாலப் பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், சிட்லிங் பஞ்சாயத்திலே, பெரிய சிட்லிங் மலைத்தாங்கி பகுதியில் கல்லாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்து, அதற்கான மதிப்பீடு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடன், அரூரிலிருந்து எஸ்தானம்பட்டி கிராமத்திற்குச் செல்ல முயன்றபோது 40 கிலோ மீட்டர் செல்வதற்கு ஏறக்குறைய 1 மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. இந்த வழியில் பாலம் கட்டப்பட்டால் ஏ.கே. தண்டா, எஸ்தாதம்பட்டி, பெரிசுமரத்தலூர், பாலகுட்டை, சேலூர் வழியாக தும்பல் கிராமத்திற்கு 5 முதல் 10 கிலோ மீட்டர் தூரத்தில் செல்ல முடியும். ஆகவே, மலைத்தாங்கி கல்லாற்றின் குறுக்கே ஒரு சிறிய பாலத்தை அடுத்த ஆண்டு கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இசைவு தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு உறுப்பினர் கோருவது நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தது என்று நினைக்கின்றேன். எனவே இதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 421, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*